# Eastern University, Sri Lanka,

## Faculty of Arts and Culture

## Second Year/ Second Semester Examination in Bachelor of Arts & Culture (Specialization in Economics 2014/2015-2013/14 Batch) (June/July 2017)

## ECS 2223 Labor Economics

2 1 SEP 2018 EASTERN UNIVERSITY, SRI LANKA.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இலிருந்து எவையேனும் 02 வினாக்களுக்கும் பகுதி 02 இலிருந்து எவையேனும் 03 நக்குமாக மொத்தமாக 05 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

### பகுதி 01

ஊழியப் பொருளாதாரம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(4 புள்ளிகள்)

ஊழியத்தினுடைய சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

நிறைபோட்டி ஊழியச் சந்தையில் குறுங்கால ஊழிய கேள்வி வளையியானது எவ்வாறு எல்லை வருமான வளையி மூலம் பெறப்படுகின்றது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.

(6 புள்ளிகள்)

ஊழியக் கேள்வி நெகிழ்ச்சியானது உயர்வாகக் காணப்படும் சந்தர்ப்பங்களை விபரிக்குக.

(6 புள்ளிகள்)

நிரம்பல் கோடானது பின்நோக்கி வளைந்து காணப்படுகின்றமைக்கான காரணத்தினை வருமான மற்றும் பதிலீட்டு விளைவினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

நவீன பழம் பொருளியல் மாதிரியானது ஊழிய நிரம்பல் தொடர்பான தீர்மானத்தை சமபயன் வளையினூடாக எவ்வாறு விளக்குகின்றது?

(5 புள்ளிகள்)

கூலி அல்லா வருமானம் ஒரு ஊழியனின் நேர ஒதுக்கீட்டு தீர்மானத்தில் ஏற்படுத்தும் மாற்றத்தை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

ஊழிய நகர்வு என்றால் என்ன? ஊழிய நகர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்க.

(5 புள்ளிகள்)

03) அ. "நிறைபோட்டிச் சந்தையில் ஒரே தன்மையான ஊழியர்கள் ஒரேயளவான சம்பளத்தைப் பெற வேண்டும். ஆனால் நடைமுறையில் ஊழியர்களுக்கிடையே கூலியானது வேறுபட்டுக் காணப்படுகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

ஆ. நட்டஈட்டுக் கூலி வேறுபாடு என்பதை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி- 02

04. இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச் சந்தையின் போக்கு மற்றும் பொருளாதார தாக்கம் என்பன பற்றி ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. "அதிக பாடசாலைப் படிப்பும் உயர் கல்வித் தரமும் கொண்டவர்கள் உயர் கூலியினைப் பெறுகின்றனர்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை "மனித மூலதன முதலீடு" எனும் எண்ணக்கருவினூடாக பொருத்தமான வரைபடங்களை பயன்படுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. அ. வேலையின்மையினால் ஏற்படும் சமூக பொருளாதார தாக்கங்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. "இலங்கையில் வேலையின்மை வீதத்தில் இளைஞர்களின் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது". இதனைக் குறைப்பதற்கான உமது பரிந்துரைகள் யாவை?

(10 புள்ளிகள்)

07. அ. தொழிற்சங்கங்களினுடைய சக்தியைத் தீர்மானிக்கும் காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. "கூலி அதிகரிப்பிற்கான போராட்டம் வேலையின்மையை உருவாக்கும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்